<u>கொடைக்கானல் நகராட்சி</u>

1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம், அட்டவணை III–ன் பிரிவு 2–ன் கீழ் 21.09.2022ஆம் நாள் திங்கள் கிழமை மாலை 4.30 மணிக்கு நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நகர்மன்றக் கூடத்தில் நடைபெறும். அது சமயம் அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/– பா.செல்லத்துரை,
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

நாள்.21.09.2022

**பொருள் எண் – 1)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான பழைய சர்வே எண்.234, புதிய சர்வே வார்டு.B, பிளாக் எண்.30, T.S.No.3, பரப்பு 64 ஏக்கர் உள்ள ஏரியில் படகுகளை இயக்குவதற்கு, 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 306 (28–A)ன் கீழ் வரைவு துணை விதிகளுக்கு, அரசு கடிதம் எண்.12 M.A.V (1) 2019–18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.05.08.2022 மூலம் இசைவு அளித்துள்ளது. இந்த வரைவு துணை விதிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 309ல் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண்.28583/2007/TP–2, நாள்.10.08.2022ன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, நகராட்சிக்கு சொந்தமான ஏரியில் படகுகளை இயக்குவதற்கு கொடைக்கானல் நகராட்சி ஏரியில் படகு இயக்குதல் (முறைப்படுத்துதல்) வரைவு துணை விதிகள் 2022 (Kodaikanal Municipal Lake Boating (Regulation) Draft Bye Law 2022)ஐ அங்கீகரித்து கொடைக்கானல் நகர்மன்றத் தீர்மானம் எண்.146, நாள்.12.08.2022ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, பொது மக்கள் இவ்வறிவிப்பு கண்ட 30 தினங்களுக்குள், நகராட்சி அறிவிப்பு பலகையில் ஒட்டப்பட்டுள்ள வரைவு துணை விதிகள் மற்றும் மன்ற தீர்மானத்தின் மீது தங்களின் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் இருப்பின் எழுத்து வடிவில் கொடைக்கானல் நகராட்சி ஆணையாளருக்கு சமர்ப்பிக்கலாம் என 18.08.2022ம் தேதிய தமிழ் முரசு நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. மேலும், அலுவலக விளம்பரப் பலகையிலும் விளம்பரம் செய்யப்பட்டது.

மேலும், நகர்மன்றத் தீர்மானம் எண்.146, நாள்.12.08.2022ல் நிறைவேற்றப்பட்ட வரைவு துணை விதிகள் மீது இரண்டு ஆலோசனைகள் எழுத்து வடிவில் மேற்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் பெறப்பட்டது. மேற்கண்ட இரண்டு ஆலோசனை மனுக்களை மன்றம் பரிசீலித்து முடிவு செய்ய மன்றப் பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1) திரு.S.மரிய ஜெயந்தன் என்பவர் தமது மனுவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொடைக்கானல் ஏரியில் படகு இயக்குவது மற்றும் முறைப்படுத்துதல் 2022 வரைவு துணை விதிகள் தொடர்பான விளம்பரத்தினை அறிந்து கொண்டேன். அது தொடர்பான எனது கருத்தினை கீழ்கண்டவாறு தெரிவிக்கின்றேன். நகராட்சிக்கு சொந்தமான ஏரியாக இருப்பதால், தனி நபர் மற்றும் தனியார் நிர்வாகம் ஏதும் படகினை இயக்க அனுமதிக்க கூடாது. மேலும், ஏரி மூலம் கிடைக்கும் வருமானம் அனைத்தும் சுற்றுலா பயணிகளுக்கும், பொது மக்களுக்கும் பயன்பெறும் வகையில் பொதுத்துறை நிர்வாகத்திற்கு 51% பங்குடன் வழங்குவதை போல மற்ற அரசு நிறுவனத்திற்கு ஏரியிலிருந்து கிடைக்கும் மொத்த வருவாயில் 51% பங்கு கொடைக்கானல் நகராட்சிக்கு வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் ஏரியினை பராமரிக்கவும், கொடைக்கானல் வாழ் மக்களுக்கு நேரடியாக நலத்திட்டங்களை செயல்படுத்தவும் அனுகூலமாக இருக்கும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) திரு.A.சந்திரமோகன் என்பவர் தமது மனுவில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொடைக்கானல் ஏரியில் படகு ஓட்டுவது தொடர்பான ஏரி துணை விதி விளம்பரம் நகராட்சி விளம்பரப் பலகையில் வெளியிடப்பட்டிருந்ததை பார்த்தேன். அதில் என்னுடைய கருத்தினை தெரிவிக்க விரும்புகின்றேன். இந்த வரைவு விதிகளில் ஏரியில் இயக்கப்படும் படகுகளின் எண்ணிக்கை குறித்த எந்த செய்தியும் இல்லை. கொடைக்கானல் வளர்ந்து வரும் சுற்றுலா நகரம். எனவே, சுற்றுலா பயணிகளின் வருகை அதிகமாக இருக்கும் போது நீண்ட நேரம் காத்திருந்து படகு செல்வதால் சுற்றுலா பயணிகள் மிகுந்த துயரம் அடைகின்றனர். எனவே, படகுகளின் எண்ணிக்கை குறைந்த பட்சம் 350 எண்ணிக்கையில் இருந்தால் நன்றாக இருக்கும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) மேற்படி மனுதாரர்களின் கருத்துக்களை மன்றம் பதிவு செய்து கொள்ளலாம்.

4) வரிசை எண்.1ல் திரு.S.மரியஜெயந்தன் அவர்களின் கோரிக்கையில் ஏரியில் படகு இயக்குவதன் மூலம் வருவாயில் நகராட்சிக்கு 51% பங்கு வேண்டும் என கோரிக்கை செய்துள்ளார். ஆனால் நகராட்சிக்கு வருவாயில் 40% வழங்க வரைவு விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், ஏரியில் அரசு சார்ந்த நிறுவனம் மட்டுமே படகு இயக்குவதால் அனைத்து வருவாயும் மக்களின் பொது நலனுக்காக பயன்படுவதால் மேற்கண்ட கோரிக்கை மனுவை நிராகரிக்கலாம்.

5) வரிசை எண்.2ல் கண்ட திரு.A.சந்திரமோகன் அவர்களின் கோரிக்கையான ஏரியில் குறைந்தபட்ச 350 எண்ணிக்கை படகுகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால் அரசாணை எண்.105, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.06.2009ல் ஏரியில் அதிகபட்சமாக 258 படகுகள் இயக்கலாம் என்ற நிபந்தனை உள்ளது. எனவே, மனுதார்ரின் மேற்கண்ட கோரிக்கையினை நிராகரிக்கலாம்.
(ந.க.எண்.2383/2007/எப்.1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **182, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. கொடைக்கானல் ஏரியில் படகு இயக்குதல் (முறைப்படுத்தல்) வரைவு துணைவிதி 2022ஐ உறுதி செய்து உரிய உத்தரவுகள் பிறப்பிக்க அரசினை கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 2)**

சட்டமன்ற அறிவிப்பு 2022–2023 மானியக் கோரிக்கை எண்.34ல் பழைய பேருந்து நிலையங்கள் மேம்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொடைக்கானல் நகராட்சி புதிய பேருந்து நிலையம் 2010ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இப்பேருந்து நிலையத்தின் மராமத்து பணி, வர்ணம் பூசுதல், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கழிப்பறை அமைத்தல் இருக்கைகள் புதுப்பித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ள ரூ.160 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு பிரேரணை அனுப்பி வைக்கவும், மேற்கண்ட தொகையினை கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து மானியமாக கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1634/2022/இ1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **183, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 3)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் இந்நகராட்சி பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சிறப்புத் திட்டம் மீண்டும் மஞ்சப்பை கூட்ட சங்கங்களின் மூலம் நகராட்சிக்கு தேவையான பொருட்கள் கொள்முதல் செய்ய முற்றிலும் நெகிழிப்பயன்பாட்டை தவிர்த்து மஞ்சப்பை உபயோகத்தினை ஊக்குவிக்கும் பொருட்டு இந்நகர் பகுதியில் உள்ள அனைத்து குடியிருப்புகள் மற்றும் வியாபார நிறுவனங்களில் ஒட்டுவதற்கு மஞ்சப்பை உபயோகத்தினை பயன்படுத்தல் மல்டிகலர் நோட்டீஸ் விழிப்புணர்வு ஸ்டிக்கர் 10000 (பத்தாயிரம் எண்ணம்) எண்ணிக்கையும், சில்வர் பால்ஸ் உள்ளிட்ட சுற்றுலா தளங்கள் மற்றும் நகரின் அனைத்து பகுதிகளிலும் விநியோகித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மஞ்சப்பை விழிப்புணர்வு மல்டிகலர் நோட்டீஸ்கள் (4 பக்கம் கொண்டது) 15000 (பதினைந்தாயிரம்) எண்ணம் உரிய அரசு நிறுவனமான The Thoothukudi district Hi–Teach Printing And Allied Service Industrial co–Operative Society Ltd., No.Tuti மூலம் அச்சடித்து வாங்கி கொள்வதற்கும் இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) பொது சுகாதார நலன் கருதி பொருள்கள் வாங்கி கொள்வதற்கு துப்புரவு ஆய்வாளர்கள் குறிப்பு கொடுத்துள்ளார்கள்.

மேற்கண்ட பொருள்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.3,00,000/– (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் விநியோக உத்தரவு வழங்கவும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **184, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 4)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் இந்நகராட்சியில் 75ம் ஆண்டு சுதந்திர பெருவிழாவை முன்னிட்டு மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் உத்தரவின்படியும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படியும் 75வது சுதந்திர பெருவிழாவினை அமுதப் பெருவிழாவாக கொண்டாடப்பட்டதற்கு காலை சிற்றுண்டி ஏற்பாடு செய்யப்பட்டதற்கு செலவுத் தொகை ரூ.40,005/– (ரூபாய் நாற்பதாயிரத்து ஐந்து மட்டும்) பட்டியல் எண்.991, நாள்.15.08.2022 ஹில்டாப் உட்லேண்ட்ஸ், கொடைக்கானல் நிறுவனத்திற்கு தொகை வழங்குவதற்கு கேட்டுக் கொள்ளப்பட்டது. மேற்கண்ட தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **184, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 5)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் தற்போது வட கிழக்கு பருவமழை தொடங்க உள்ள நிலையில் அனைத்து பொது இடங்கள், மக்கள் கூடும் இடங்கள் மற்றும் குப்பை சாக்கடை தூர்வாரும் இடங்களில் கிருமி நீக்கம் செய்யவும், கிருமி நாசினி பயன்படுத்திடவும் தற்போது இந்நகராட்சியில் போதுமான கையிருப்பு இல்லாத காரணத்தினால் நீர்த்த சுண்ணாம்பு தூள் 30,000 கிலோ எண்ணிக்கையிலும், பிளிச்சிங் பவுடர் 20,000 கிலோ எண்ணிக்கையிலும் தேவை படுவதாலும் மேலும் தற்போது வருடத்தின் இரண்டாம் சீசன் ஆரம்பிக்க உள்ள நிவையிலும் பொது சுகாரார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும், இந்நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் நலனினை கருத்தில் கொண்டும் மேற்கண்ட கிருமி நாசினி பொருட்களை வாங்கி வழங்கிட அதற்கான உத்தேச செலவீனம் ரூ.9,50,000/– ஆகும். பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வார்கள் குறிப்பு கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட பொருள்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.9,50,000/–(ஒன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் விநியோக உத்தரவு வழங்கவும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அமைத்திக்கலாம்.
(ந.க.எண.1108/ 2022/ H1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **185, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 6)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் நகராட்சிக்கு உட்பட்ட 24 வார்டு பகுதிகளில் உள்ள சமுதாய மற்றும் பொது கழிப்பறைகள் மக்கள் அதிகம் கூடும் பகுதிகளாகிய பேருந்து நிலையம், வார சந்தை, நட்சத்திர ஏரி பகுதிகளில் தொற்று நீக்கம் செய்யவும், இந்நகராட்சி சர்வதேச சுற்றுலா தளம் என்பதால் நகர் பகுதிகளில் குப்பை சேகரிக்கும் பெட்டிகளின் அருகில் துர்நாற்றம் எதுவும் வீசா வண்ணம் தடுக்கவும் தற்போது இந்நகராட்சியில் கிருமி நாசினிகள் போதிய கையிருப்பு இல்லாத காரணத்தினால் லெமன் கிராஸ் ஆயில் (LEMON GRESS) வேதிக்கலவை மற்றும் கருப்பு பினாயில், வெள்ளை பினாயில் கையிருப்பு மிகவும் குறைவாக உள்ளதால் இனிவரும் காலம் பருவ மழைகாலம் என்பதாலும் பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு லெமன் கிராஸ் ஆயில் 150லிட்டர் அளவிலும் வெள்ளை மற்றும் கருப்பு பினாயில் தலா 500லிட்டர் அளவில் மொத்தமாக 1000லிட்டர் அளவில் வாங்கி வழங்கிடவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.600000/– ஆகும். எனவே பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வார்கள் குறிப்பு கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட பொருள்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.6,00,000/–(ஆறு லட்சம் மட்டும்) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் விநியோக உத்தரவு வழங்கவும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அமைத்திக்கலாம். (ந.க.எண.1106/ 2022/ H1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **187, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 7)**

கொடைக்கானல் நகராட்சி பொது சுகாதாரம் இந்நகராட்சிக்கு உட்பட்ட 24 வார்டு பகுதிகளில் 69 நிரந்தர தூய்மை பணியாளர்கள் கொண்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பணிபுரியும் பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்களாகிய கையுறை மற்றும் முக்கவசம் போது மான கையிருப்பு இல்லாத காரணத்தினால் தூய்மை பணியாளர்களின் பாதுகாப்பினையும் அவர்களுக்கு நோய் தொற்று ஏற்படா வண்ணம் தடுக்கவும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகவும் பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் பணியாளர்களின் நலன் கருதியும் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்படும் கையுறைகள் 5000 எண்ணிக்கையிலும் முகக்கவசம் 25,000 எண்ணிக்கையிலும் மருபயன்பாடு செய்யக்கூடிய கையுயைகள் 500 எண்ணிக்கையிலும் வாங்கி வழங்கிட அதற்கான உத்தேச செலவீனம் ரூ.9,00,000/- ஆகும். இந்நகராட்சி தூய்மை பணியானர்களின் நலனினை கருத்தில் கொண்டும் பொது சுகாதார அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டும் மேற்கண்ட பாதுகாப்பு உபகரணங்களை வாங்கி வழங்கிட துப்புரவு ஆய்வார்கள் குறிப்பு கொடுத்துள்ளனர்.

மேற்கண்ட பொருள்கள் வாங்கிக் கொள்ளவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.9,00,000/-(ஒன்பது லட்சம் மட்டும்) மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் விநியோக உத்தரவு வழங்கவும் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அமைத்திக்கலாம். (ந.க.எண.1107/ 2022/ H1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **188, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 8)**

இந்நகராட்சியின் 2021-2022ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு – மன்றம் ஒப்புதல் வழங்கலாம். (ந.க.எண்.2650/2016/சி1)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **189, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 9)**

கொடைக்கானல் நகராட்சிக்கு சொந்தமான மூஞ்சிக்கல் பகுதியில் அமைந்துள்ள ஆனந்தகிரி துவக்கப்பள்ளி எதிர்புறம் உள்ள இந்நகராட்சி வார்டு 8ல் அமைந்துள்ள வார்டு.D, பிளாக் எண்.3, நகரளவு எண்.85 –இல் அமைந்துள்ள, 1985 வரை கோடை டாக்கிஸ் என்ற பெயரிலும் அதன் பின்னர் குத்தகையில் கோட்டசியர் அலுவலகமாகவும், அன்னைதெரசா மகளிர் கல்லுரியாகவும், அதன் பின்னர் நகராட்சி பழைய அலுவலகத்தினை புதுப்பிக்கும் போது கட்டுமானப் பணிகள் முடிவுறும் வரை நகராட்சி அலுவலகமாக செயல்பட்டு வந்த கட்டிடம் தற்போது எவ்வித பயன்படுமின்றி இடியும் தருவாயில் உள்ளது. கட்டிடடம் முழுவதும் சேதமடைந்து சிதிலமடைந்துள்ளது.

மேலும், மேற்கூரை பகுதி மழையின் போது ஒழுகி உட்புறத்தில் நீர் தேங்குவதால் துர்நாற்றம் வீசுவதோடு பொதுசுகதராத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தியும், கால்நடைகள் உள்ளே சென்று சுகாதார கேடு ஏற்படுத்துவதோடு, சமுக விரோத செயல்களும் அதிகமாக நடைபெற்று வருகிறது. இக்கடிடத்தினால் தற்போது எவ்வித வருவாயும் நகராட்சிக்கு வருவதில்லை. எனவே, மேற்கண்ட கட்டிடத்தை நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் குத்தகைக்கு விடக்கோரி நகர்மன்றத் தலைவர் அவர்களால் கோரப்பட்டுள்ளது.

மேலும், இதே போன்று நகராட்சிக்கு சொந்தமான கவி தியாகராஜர் சாலையில் அமைந்துள்ள எட்டு அறைகள் கொண்ட தங்கும் விடுதி மற்றும் அண்ணா சாலையில் உள்ள ஐந்து அறைகள் கொண்ட தங்கும் விடுதி ஆகியவை பயன்பாடு அற்ற நிலையில் உபயோகப்படுத்துவதற்கு இயலாத நிலையில் இருந்து வந்ததை நகர்மன்றத் தீர்மானம் எண்.947 மற்றும் 948, நாள்.13.01.2014ன்படி அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ல் சொல்லப்பட்டுள்ள கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு அரசின் கொள்கைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நகராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துகளை பாதுகாப்பதோடு அவற்றை பயனுடையதாகவும் செயல்படுத்தி அதன் மூலம் நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய அளவிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரி குத்தகைதாரரிடம் ஒப்படைக்கப்பட்டு அதன் மூலம் நகராட்சிக்கு வருவாய் ஈட்டபட்டு வருகிறது.

மேற்கண்ட மூஞ்சிக்கல் பகுதியில் உள்ள பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தை (உள்ளது உள்ளபடியே) தற்போது உள்ள கட்டிடத்தின் அமைப்பில் எவ்வித மாறுதலும் இல்லாமல் (Without any Structural Modification) குத்தகைதாரர்களது சொந்த செலவில் அலுவலக பயன்பட்டிற்கோ அல்லது வணிக பயன்பாட்டிற்கோ பொதுமக்கள் மற்றும் சுற்றுலாபயணிகள் பயன்பெறும் வகையில் மேற்கண்ட கட்டிடத்தை பயன்படுத்தி கொள்ள அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ல் சொல்லப்பட்டுள்ள கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு அரசின் கொள்கைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நகராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துகளை பாதுகாப்பதோடு அவற்றை பயனுடையதாகவும் செயல்படுத்தி அதன் மூலம் நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய அளவிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரி மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்கு விட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: நகராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துகளை பாதுகாப்பதோடு, நகராட்சிக்கு வருமானம் ஈட்டக் கூடியதாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1094/2022/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **190, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 10)**

கொடைக்கானல் நகரம் ஓர் சர்வதேச சுற்றுலாத் தலமாகும், இங்கு ஆண்டுதோறும் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து வருகிறது. இதனால் பொது மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு பொது போக்கு அம்சங்கள் மற்றும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திதருதல் நகராட்சி கடமையாகும். இந்நகராட்சியில் அடிப்படை வசதிகள் அதிகளவில் ஏற்படுத்திதர நகராட்சி வருவாய் போதுமானதாக இல்லை. எனவே நகராட்சியின் வருவாயினை அதிகப்படுத்தும் பொருட்டு நகராட்சி பகுதியிலுள்ள, வார்டு.B, பிளாக் எண்.34, நகரளவு எண்.5–ல் அமைந்துள்ள 40 செண்ட் காலியிடத்தில் சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் கேளிக்கை பூங்காக்களோ, தங்கும் விடுதியோ அல்லது வணிக பயன்பாட்டில் பயன்பெறும் வகையிலோ நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் வகையில் குத்தகைக்கு விடக்கோரி நகர்மன்றத் தலைவர் அவர்களால் கோரப்பட்டுள்ளது. மேற்கண்ட நிலத்தினை விவசாய பயன்பாட்டிதிற்கு குத்தகைக்கு விட 19.02.2021 முதல் பலமுறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும், ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. எனவே, அரசாணை எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.03.07.2007ல் சொல்லப்பட்டுள்ள கொள்கை கோட்பாட்டிற்கு உட்பட்டு அரசின் கொள்கைக்கு குந்தகம் ஏற்படாத வகையில் நகராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துகளை பாதுகாப்பதோடு அவற்றை பயனுடையதாகவும் செயல்படுத்தி அதன் மூலம் நகராட்சிக்கு வருமானம் வரக்கூடிய அளவிற்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரி மாத வாடகை அடிப்படையில் குத்தகைக்குவிட மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: நகராட்சிக்கு கட்டுப்பட்ட அசையா சொத்துகளை பாதுகாப்பதோடு, நகராட்சிக்கு வருமானம் ஈட்டக் கூடியதாகவும் உள்ளதால் மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1094/2022/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **191, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

*******

**பொருள் எண் – 11)**

கொடைக்கானல் நகராட்சிக் சொந்தமான அலுவலக வளாகத்தில் மேற்கு பகுதியில் அமைந்துள்ள இந்தியன் வங்கி ATM அருகிலுள்ள 11 x 8 = 88 சதுரடி அளவுள்ள கடையினை மாத வாடகைக்கு நகராட்சி நகர்மன்றத் தீர்மானம் எண்.1005, நாள்.26.02.2021ன்படி திரு.பா.அரசகுமார் என்பவருக்கு மாத வாடகை ரூ.2800/– க்கு குத்தகை நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

மேற்கண்ட கடையினை நகராட்சி பயன்பாட்டிற்கு தேவைப்பட்டதால் நகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்டதால் அதற்கு பதிலாக மாற்று கட்டிடம் ஒதுக்கித்தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

மேற்கண்ட 11 x 8 = 88 சதுர அளவுள்ள கட்டிடத்திற்கு பதிலாக வழங்குவதற்கு வேறு கட்டிடம் நகராட்சி வசம் இல்லாத காரணத்தினால், நகராட்சிக்கு சொந்தமான புருட்டன் வளாகத்தில் கே.ஆர்.ஆர்.கலையரங்கம் முன்புறம் அமைந்துள்ள தரைக்கடைகளுக்கு அருகிலுள்ள 17 x 5 = 85 என்ற அளவில் உள்ள காலியிடத்தில் தனது சொந்த பொறுப்பில் கடை அமைத்துக் கொள்ளவும், நகர்மன்றத் தீர்மானம் எண்.1005, நாள்.26.02.2021ன்படி மாதவாடகை செலுத்தவும் உத்தரவு வழங்க மன்றத்திக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.345/2022/அ3)

| | |
|---|---|
| **நகர்மன்றத் தீர்மானம் எண் / நாள் :** | **192, நாள். 21.09.2022** |
| | |
| **நகர்மன்றத் தீர்மானம் :** | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/–பா.செல்லத்துரை
நகர்மன்றத் தலைவர்,
கொடைக்கானல் நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
கொடைக்கானல் நகராட்சி.